2012 பிப்ரவரி 4]

விடை—

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, செக்கானூரணி அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான அளவில் வகுப்பறைகள் உள்ளதால், கூடுதல் வகுப்பறை கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை. இப்பள்ளிக்கு 750 மீட்டர் அளவிற்கு சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள் விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு :** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு)* Zero hour not allowed today. *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. வி. சோமசுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் குல தெய்வம், ஏழையெளிய மக்களின் துயர்போக்கும் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிவோடு வணங்கி, 2011–2012 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 4 முதல் 15 வரையிலான 12 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*